3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) உடுக்குறி வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெற்று பேரவைமுன் வைக்கப் பெற்றுள்ளது குறித்து.

* திரு. துரை முருகன்: நான் 'மிசா' வைப் பற்றி ஒரு கேள்வி கேட்டிருந்தேன். என்னைப் போல் பல அங்கத்தினர்களும் கேட்டிருந்தார்கள். அவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சருடையது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கேள்விக்கு மட்டுமல்லாமல் அது போன்ற பல கேள்விகளுக்கு எழுத்து மூலமாகப் பதிலளித்திருக்கிறார்கள். இதனால் துணைக் கேள்விகள் கேட்கிற வாய்ப்பு இல்லாமல் போகிறது. முதலமைச்சர் அவர்கள் இதுவரை கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலே இருப்பது, எழுத்து மூலமாகத் தருவது, சபைக்கு வராமலே இருப்பது என்பதெல்லாம் சட்டப்படி ஒருவேளை சரியாக இருந்தாலும் கூட இந்த அவையின் 'கஸ்டம்ஸ் அண்டு கன்வென்சன்' படி சரியா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். இந்த அவையை நல்ல முறையில் நடத்திச் செல்வதில் உங்களுக்கும் பொறுப்பு உண்டு. திரு. துரை முருகன் சொன்ன பிரச்சினையில் முதலமைச்சர் வந்துதான் பதில் சொல்ல வேண்டும்; அவர் வரவில்லை, போகவில்லை என்று சொல்லுவதிலிருந்து நான் எந்தவித முடிவும் எடுக்க உரிமை கிடையாது. நீங்கள் எழுப்புகிற பிரச்சினை எந்த விதியின்கீழ் என்று சொன்னால் நான் பரிசீலிக்கத் தயார். உடுக்குறி இடப் படாத கேள்விகள் என்ற காரணத்தால் அவற்றுக்கான பதில்கள் அச்சடிக்கப் பெற்று மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக் காலமாக நடைபெறுகிற இந்த ஆட்சியில் ஒரே ஒரு தடவை மூன்று அல்லது நான்கு கேள்விகளுக்குத்தான் இதுவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அவரிடம் இருக்கக்கூடிய இலாகாக்கள் ஏராளம். பல முக்கியமான இலாகாக்கள் போலீஸ் இலாகா, தொழிற் துறை இப்படிப்பட்ட பல முக்கியமான இலாகாக்களை வைத்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் வந்து பதிலளிக்கிற நேரத்தில் மூலக்

1978 செப்டம்பர் 1] [திரு. மு. கருணாநிதி]

கேள்விகளுக்கு அளிக்கிற பதிலையொட்டி சில துணைக் கேள்விகளை உறுப்பினர்கள் கேட்க வாய்ப்பு இருக்கும். இப்போது அமைச்சர்கள் 'பரிசீலிப்போம்' என்றும், 'நல்ல யோசனை' என்றும், 'அதற்கான முனைப்பான நடவடிக்கை எடுப்போம்' என்றும் பதில் சொல்வது உறுப்பினர்களுக்கு ஆறுதலாக இருக்கிறது. அதைப் போல் முதலமைச்சரும் இங்கே வந்து எழுப்பப்படுகிற துணை வினாக்களுக்குப் பதிலளித்தால் ஆறுதலாக இருக்கும். எடுக்கப் படுகிற நடவடிக்கைகளை அறிவித்தால் நாட்டு மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கடந்த ஓராண்டுக் காலத்தில் முதலமைச்சர் அவர்கள், பல இலாகாக்களை கையில் வைத்துக் கொண்டு நான்கு கேள்விகளுக்குத்தான் பதிலளித்திருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் அவைக்கு வருவது கூடக் கிடையாது. கட்டாயப்படுத்த முடியாது, விதி இல்லை என்று சொல்லுவீர் களானால் எங்களுடைய விதியை நாங்கள் அனுபவித்துக் கொண் டிருக்கிறோம்.

(முற்பகல் 10-20)

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேள்விகளில் உடுக்குறியிடப்பட்ட கேள்வியா, உடுக்குறியிடப் படாத கேள்வியா என்பதை ஏதோ அமைச்சரவையிலே நாங்கள் தீர்மானித்து அதற்கேற்ப பதில் தருகிறோம் என்ற கருத்து இங்கே தரப்பட்டு இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட உரிமை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்தான் உண்டு. அவர்கள் கேள்விகளை எழுதியனுப்புகிறபொழுதே உடுக்குறியிட்டு எழுதி யிருந்தால் அதற்கு நாங்கள் சட்ட மன்றத்திலே நேர்முறையாகவே பதில் சொல்ல வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: உடுக்குறியிடப்பட்டு கேள்விகளை அனுப்பினாலும் கூட அதை அலுவலகத்தில் உடுக்குறியிடாதவை யாக மாற்றிவிடுகிறார்கள், அப்படிப்பட்ட ஒரு முறையை இப்போது அனுஷ்டித்து வருகிறார்கள்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதற்கும்கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதுபற்றி தகவல் தரப்பட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். ஏனென்றால் விதி 29 இல்

'A Member who desires an oral answer to his question shall distinguish it as a starred question by an asterisk and if he does not so distinguish it by an asterisk, the question shall if admitted, be printed in the list of questions as an unstarred question for written answer.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அது அமைச்சரவையிலேலே எடுக்கப்படுகின்ற முடிவு அல்ல. மேஜையின்மீது பதில்கள் அச்சடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது வேறு அமைச்சர்களோ பதில் சொல்ல முடியாததாலோ அல்லது சொல்லக் கூடாது என்பதாலோ என்று கருத வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. சுப்புவும், திரு. துரை முருகனும் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே நேரத்திலே திரு. சுப்புவும் எழுந்திருக்கிறார், திரு. துரை முருகனும் எழுந்திருக்கிறார், நான் யாரைக் கூப்பிடுகிறேனோ அவர்கள்தான் எழுந்திருக்க வேண்டும், எழுந்தவுடனே பேச வேண்டுமென்றால் பேசிக் கொண்டே இருங்கள், நான் என்ன செய்வது? எதிர்க் கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினை பற்றியே மீண்டும் எழுப்புவதற்கு வாய்ப்பு தர முடியாது. கடந்த சட்ட மன்றக் கூட்டத்தில் நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன், நிறைய கேள்விகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தக் கேள்விகளை உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி பதில்களை அச்சடித்து மேஜையின் மீது வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு உறுப்பினருடைய கேள்விகள் இரண்டுக்கும் மேற்படாமல் எடுத்துக் கொள்ளலாம், அதற்கு மேற்கொண்டு இருந்தால் அவற்றை உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி மேஜையின் மீது வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை

1978 செப்டம்பர் 1] [பேரவைத் தலைவர்]

மாற்றியது தவறு என்று குற்றஞ்சாட்ட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினை அதோடு முடிகிறது. ஆனால் மற்றப் பிரச்சினைகளை எழுப்பினால், அவைகளை எழுப்புகிறபோது எந்த விதியின் கீழ் எந்த அமைச்சர் வரவில்லை என்று குறிப்பாகச் சொல்லி விதியைக் காட்டினால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் அவையிலே குறிப்பிட்டது 'கேள்விகள் விடப்படுமானால் அரசாங்கம் கொடுக்கிற பதில், அச்சிட்டுத் தரப்படவேண்டுமென்று அவர் சொன்னார், அதேபோன்று நான் அச்சிட்டுத் தரத் தயாராக இருக்கிறேன்' என்பதுதான். பேராசிரியர்தான் அதைச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதை நான் ஏற்றுக் கொண்டு அந்த அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: நான் சொன்ன யோசனையே தங்களுக்கு உதவி செய்வதற்காகத்தான். இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்படாமல் தொடர் கூட்டம் முடிகின்ற வரையில் நின்றுபோன கேள்விகளை அச்சடித்து அவையிலே வைப்பதன் மூலமாக அந்தக் கேள்விகளுக்குப் பதில்களைத் தாருங்கள் என்ற வகையிலேதான் சொல்லப்பட்டதே தவிர, முக்கியமான கேள்விகளுக்கு அமைச்சர்கள் அவைக்கு வராமல் இருந்து கொண்டு, நிதியமைச்சர் அவர்களோ முதலமைச்சர் அவர்களோ வராமல் இருந்து அந்தக் கேள்விகளுக்கான பதில்கள்—சட்டமன்றம் நடக்கும் 10, 12 நாட்களிலும் கூறப்படாமல் இருக்குமானால்—அப்படிப்பட்ட கேள்விகளை சபாநாயகர் உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி பதில்களை வைக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை, அப்படிப்பட்ட முறையில் கேள்விகளுக்குப் பதில்களை அவையில் வைப்பது என்பது பொறுப்பான பதிலாகத் தெரியவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிறபோது எந்த விதியின்படி, எந்தச் சட்டத்தின்படி வரவில்லையென்று சொல்ல வேண்டுமென்று சொல்வது எதற்கோ எதுவோ சாட்சி என்ற மாதிரிதான் ஆகுமே தவிர பிரச்சினைக்கு முடிவு காண்பது ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து நீங்கள் அமருங்கள். நான் சொல்லிவிடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவாவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் அமருங்கள். நான் உங்களை அனுமதிக்கவில்லை. என்னுடைய அனுமதியில்லாமல் பேசுவது தவறு.

திரு. க. சுப்பு: அவர் எந்த அடிப்படையில் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்களும் உட்காருங்கள். இப்படி நீங்கள் எழுந்தால் அவரே மேல் என்று ஆகிவிடும்.

நான் பேராசிரியர் சொன்னதற்குச் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது உடுக்குறியிடாது வைத்த கேள்விகள் உங்கள் அனுமதியோடுதான், அவையின் அனுமதியோடுதான் செய்யப் பட்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற மீதி அறிவுரைகளை, இந்த அவைக்குச் சொன்ன அறிவுரைகளை நான் பரிசீலிக்கிறேன். ஆனால் இதுவரையில் செய்தது அவையின் அனுமதியோடு செய்ததே தவிர நான் தனியாகச் செய்யவில்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன்: நான் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றரை மணி வரையில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிக் கொண்டிருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன்: நான் ஆரம்பத்திலேயிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியில் உள்ள வர்கள் தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சரி சொல்லுங்கள்.